மனதுருக்கத்தில் குறைந்தவராக ஆகிவிட்டாரா? அவருடைய அன்பு குறைந்து போயிருக்கிறதா? நிச்சயமாக இல்லை!

### மற்றொரு எதிர்ப்பு: ''ஏதோ காரணத்துக்காக நான் நோயாளியாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்''

நாம் இதுவரை பார்த்த வேதவசனங்களிலிருந்து இது முடியாத காரியம் என்பதை அறிகிறோம். நீங்கள் தொடர்ந்து கீழ்ப்படியாமையில் இருப்பீர்களானால், உங்களை மனந்திரும்பும்படி செய்வதற்காக தேவன் தொடர்ந்து உங்களை நோயாளியாக விட்டிருக்கலாம். என்றாலும் நீங்கள் நோயாளியாகவே இருப்பது அவருடைய சித்தமல்ல. நீங்கள் மனந்திரும்பி, குணமாக வேண்டுமென்றே அவர் விரும்புகிறார்.

மேலும், நீங்கள் நோயாளியாகவே இருக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாக இருக்குமானால், நீங்கள் ஏன் மருத்துவரிடம் சென்று, குணமாக வேண்டும் என்ற நோக்கத்தோடு மருந்துகளை உட்கொள்ளுகிறீர்கள்? நீங்கள் ''தேவனுடைய சித்தத்துக்கு'' விரோதமாகச் செயல்படவில்லையா?

### இறுதியான எதிர்ப்பு: ''நாம் நோய்வாய்ப்படாவிட்டால், பிறகு எப்படி மரிப்போம்?''

நமது பொருள்ரீதியான சரீரம் அழிந்துகொண்டிருக்கிறது என்று வேதாகமம் போதிப்பதை நாம் அறிவோம் (பார்க்க, 2 கொரி. 4:16). நமது தலைமயிர் வெள்ளையாவதையோ, நமது உடல் முதுமையடைவதையோ நம்மால் தடுக்க முடியாது. நாம் இளவயதில் இருந்ததுபோல இப்போது அதே தெளிவான பார்வையோடும், கேட்கும் சக்தியோடும் முதிர்வயதில் இருப்பதில்லை. நம்மால் வேகமாக ஓட முடியாது. நமது இருதயம் உறுதியானதாக இல்லை. நாம் மெதுவாக அழிந்துகொண்டிருக்கிறோம்.

ஆனால் நாம் இதற்காக நோயினால் மரிக்க வேண்டும் என்பதில்லை. நமது சரீரம் முற்றிலுமாகத் தளர்ந்து போகும். அப்படிப்பட்ட வேளையில் தேவன் நம்மைப் பரலோகத்துக்கு அழைக்க, நமது ஆவி சரீரத்தை விட்டுவிட்டு அங்கே செல்லும். பல விசுவாசிகள் இப்படி மரித்திருக்கிறார்கள். ஏன் நீங்களும் அப்படி மரிக்கக் கூடாது?



## 16

# இயேசுவின் குணமாக்கும் ஊழியம்

இயேசுவானவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறபடியால், அவர் தாம் விரும்பிய எந்த வேளையிலும் அற்புதத்தைச் செய்யலாம், எவரையும் குணமாக்கலாம் என்று பெரும்பாலும் நினைக்கிறார்கள். ஆனால் நாம் வேதவசனங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, இயேசுவானவர் தெய்வீகமானவராக இருந்தாலும், அவர் தமது உலக ஊழியத்தில் கட்டுப்படுத்தப்பட்டவராக இருந்தார் என்பதை நாம் அறிகிறோம். ''பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்'' என்று அவர் ஒருமுறை சொல்லியிருக்கிறார் (யோவான் 5:19). இயேசுவானவர் கட்டுப்படுத்தப்பட்டவராகத் தமது பிதாவானவரைச் சார்ந்திருந்தார் என்பதை இது காட்டுகிறது.

பவுலைப் பொருத்தவரையில், இயேசுவானவர் மானிடனானபோது தேவனாகத் தாம் முன்பு வைத்திருந்த சில காரியங்களைவிட்டுத் ''தம்மை வெறுமையாக்கினார்'' என்று சொல்லியிருக்கிறார்.

> கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், *தம்மைத்தாமே வெறுமையாக்கி*, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலி. 2:5–7 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

அவர் எவைகளிலிருந்து ''தம்மைத்தாமே வெறுமையக்கினார்''? அது அவருடைய தெய்வத்துவம் அல்ல. அது அவருடைய பரிசுத்தம் அல்ல. அது அவருடைய அன்பும் அல்ல. அது அவருடைய இயல்புக்கு அப்பாற்பட்ட வல்லமையாகவே இருக்க வேண்டும். அவர் இனிமேலும்

சர்வவியாபகராக [எங்கும் இருப்பவராக] இருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இதைப்போலவே அவர் சர்வஞானியாகவும், சர்வ வல்லவராகவும் இருக்கவில்லை. அவர் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேம் பெற்ற ஒருவராகச் செயல்பட்டார். நான்கு சுவிசேஷங்களையும் நாம் ஆராய்ந்து பார்க்கும்போது இது தெளிவாகிறது.

எடுத்துக்காட்டாக, *இயேசுவானவர் தேவனுடைய குமாரனாக இருப்பாரானால், அவர் முப்பதாம் வயதில் தமது ஊழியத்தைத் துவங்கும் போது ஏன் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற வேண்டியிருந்தது? ஏன் தேவன் தேவனால்* ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது? என்ற கேள்வியை நாம் கேட்கலாம்.

இயேசுவானவர் ஊழியத்துக்காக அபிஷேகம் பண்ணும்படியாகப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அவருக்குத் தேவைப்பட்டது என்பது தெளிவாகிறது. எனவேதான் ஞானஸ்நானம் பெற்றபின் விரைவாகவே அவர் இந்த வார்த்தைகளைப் பிரசங்கித்தார்: ''கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை *அபிஷேகம்பண்ணினார்*; ...குணமாக்கவும், ...பிரசித்தப்படுத்தவும், ... விடுதலையாக்கவும்,... பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்'' [லூக்கா 4:18 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

எனவேதான் பேதுருவும் இப்படிப் பிரசங்கித்தார்: ''நசரேயனாகிய இயேசுவைத் *தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்*; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்'' [அப். 10:38 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

எனவேதான் இயேசுவானவர் முப்பதாம் வயதில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறும் வரையில் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை. இருபத்தைந்தாம் வயதில் அவர் தேவனுடைய குமாரனாக இருக்கவில்லையா? நிச்சயமாக இருந்தார். பிறகு ஏன் அவர் முப்பதாம் வயது வரையில் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை? தேவன் வைத்திருக்கும் இயல்புக்கு அபபாற்பட்ட வல்லமையை விட்டுவிட்டு இயேசுவானவர் தம்மை வெறுமையாக்கியிருந்ததே காரணமாகும். அவர் பரிசுத்த ஆவியானவரால் வல்லமையளிக்கப்படும் வேளைக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது.

## இயேசுவானவர் ஆவியானவரால் அபிஷேகம்பெற்ற ஒரு மனிதராக ஊழியம் செய்தார் என்பதற்குக் கூடுதலான நிரூபணம்

சுவிசேஷங்களை வாசிக்கும்போது, இயேசுவானவர் சில வேளைகளில் இயல்புக்கு அப்பாற்பட்ட அறிவைப் பெற்றிருந்தார் என்றும்,





மற்ற வேளைகளில் அப்படிப் பெறவில்லை என்றும் நாம் பார்க்கிறோம். உண்மையில், விவரங்களை அறிவதற்காக இயேசுவானவர் அடிக்கடி கேள்விகளைக் கேட்டார்.

எடுத்துக்காட்டாக, அவர் கிணற்றருகே வந்த சமாரியப் பெண்ணிடம் அவளுக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள் என்றும், இப்போது அவளோடு இருப்பவன் அவளுடைய கணவன் அல்ல என்றும் அறிவித்தார் [பார்க்க, யோவான் 4:17–18]. இயேசுவானவர் இதை எப்படி அறிந்தார்? அவர் தேவனாக இருப்பதாலும், தேவன் எல்லாவற்றையும் அறிந்தவர் என்பதினாலும் அவர் இதை அறிந்தாரா? இல்லை. அப்படியிருக்குமானால் இயேசுவானவர் தொடர்ந்து அந்தத் திறனை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் அந்தக் கணத்தில் அவருக்கு ''அறிவை உணர்த்தும் வசனத்தைக்'' [1 கொரி. 12:8]. கொடுத்ததினாலேயே அவர் அந்தப் பெண்ணின் வரலாற்றைச் சொல்ல முடிந்தது. இந்த வரம் தற்காலத்திலோ அல்லது கடந்த காலத்திலோ ஒன்றைக்குறித்து அறியும் இயல்புக்கு அப்பாற்பட்ட திறனாகும். [அடுத்த அத்தியாயத்தில் நாம் பரிசுத்த ஆவியானவரின் வரங்களைக் குறித்து விளக்கமாகப் பார்ப்போம்].

இயேசுவானவர் எல்லா வேளைகளிலும், எல்லாவற்றையும் அறிந்திருந்தாரா? இல்லை. பெரும்பாடுள்ள ஸ்திரீ அவருடைய வஸ்திரத்தைத் தொட்டபோது, அவர் தம்மிலிருந்து வல்லமை வெளிப்பட்டதை உணர்ந்தார். எனவே அவர் ''என் வஸ்திரங்களைத் தொட்டது யார் '' என்று கேட்டார் [மாற்கு 5:30]. மாற்கு 11:13 வசனத்தில் பார்க்கும்போது, இயேசுவானவர் தொலைவில் ஒரு அத்திமரத்தைக் கண்டபோது, ''அதில் ஏதாகிலும் அகப்படுமா என்று பார்க்க வந்தார்.''

தம்மைத் தொட்டது யார் என்று இயேசுவானவர் ஏன் அறியவில்லை? அந்த அத்திமரத்தில் பழங்கள் இருக்கின்றனவா அல்லது இல்லையா என்பதை அவர் ஏன் அறியவில்லை? ஏனென்றால் இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பெற்று, ஆவியானவரின் வரங்களைக் கொண்ட ஒரு மனிதனாகச் செயல்பட்டார். ஆவியானவரின் சித்தப்படி ஆவியானவரின் வரங்கள் செயல்படுகின்றன [பார்க்க, 1 கொரி. 12:11; எபி. 2:4]. பரிசுத்த ஆவியானவர் தமது சித்தப்படி அவருக்கு ''அறிவை உணர்த்தும் வசனத்தைக்'' கொடுக்கும் வரையில், இயேசுவானவர் இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் காரியங்களை அறியவில்லை.

இயேசுவின் குணமாக்கும் ஊழியத்தைக் குறித்தும் இதுவே உண்மையாக இருக்கிறது. இயேசுவானவரால் எந்த வேளையிலும் எல்லோரையும் குணமாக்க முடிவதில்லை என்பதை வேத வசனம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, மாற்கு சுவிசேஷத்தில், இயேசுவானவர் தமது சொந்த ஊராகிய நாசரேத்துக்குச்

சென்றபோது, தாம் விரும்பிய எதையும் அவரால் செய்ய முடியாமல் இருந்தது என்று நாம் வாசிக்கிறோம்.

> அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார்; அவருடைய சீஷரும் அவரோடே கூட வந்தார்கள். ஓய்வுநாளானபோது, ஜெபஆலயத்தில் உபதேசம்பண்ணத் தொடங்கினார். அநேகர் கேட்டு, ஆச்சரியப்பட்டு, இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது? இவன் கைகளினால் இப்படிப்பட்ட பலத்த செய்கைகள் நடக்கும்படி இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது? இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே யூதா சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார். அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, *வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல்*, அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு; கிராமங்களிலே சுற்றித் திரிந்து, உபதேசம் பண்ணினார் (மாற்கு 6:1–6 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

இயேசுவானவர் அங்கே அற்புதத்தைச் *செய்யவில்லை* என்று மாற்கு கூறாமல் *செய்யக்கூடவில்லை* என்று சொல்லுவதைக் கவனியுங்கள். ஏன்? ஏனென்றால் நாசரேத்தின் மக்கள் அவரை விசுவாசிக்கவில்லை. அவர்கள் இயேசுவைத் தேவனுடைய அபிஷேகம் பெற்ற குமாரனாக ஏற்றுக்கொள்ளாமல், ஒரு உள்ளூர் தச்சனின் மகனாகவே ஏற்றுக்கொண்டார்கள். இயேசுவானவர்தாமே ‘‘தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்’’ என்று குறிப்பிட்டிருக்கிறார் (மாற்கு 6:4). எனவே அவரால் செய்ய முடிந்ததெல்லாம் சிறிய சுகவீனம் கொண்ட சிலரைக் குணமாக்க முடிந்ததேயொழிய வேறொன்றையும் அவரால் செய்ய முடியவில்லை. இயேசுவானவர் தாம் தமது வாழ்க்கையில் அதிகமான நாட்களைக் கழித்த அந்தப் பட்டணத்திலேயே அற்புதங்களைச் செய்யவும், அற்புதமான வகையில் மக்களைக் குணமாக்கவும் விரும்பியிருப்பார் என்பது நிச்சயம். என்றாலும், அவரால் அப்படிச் செய்ய முடியவில்லை என்று வேதாகமம் சொல்லுகிறது.





## லூக்காவிலிருந்து இன்னுமதிக விவரங்கள்

இயேசுவானவர் அடிப்படையில் இரண்டு வெவ்வேறான வழிகளில் குணமாக்கினார்: 1) நோயாளிகள் குணமாகுவதற்கான விசுவாசத்தைப் பெறும்படி ஊக்குவிப்பதற்காகத் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தல். 2) பரிசுத்த ஆவியானவரின் சித்தப்படி ‘‘குணமாக்குதலின் வரத்தைச்’’ செயல்படுத்துவதின் மூலம். எனவே இயேசுவானவர் தமது ஊழியத்தில் இரண்டு காரியங்களினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார்: 1) நோயாளிகளின் அவநம்பிக்கை. 2) ‘‘குணமாக்குதலின் வரத்தின்’’ மூலம் தம்மை வெளிப்படுத்தும் பரிசுத்த ஆவியானவரின் சித்தம்.

இயேசுவானவரின் சொந்த ஊரில் பெரும்பாலான மக்கள் அவர்மீது நம்பிக்கை வைக்கவில்லை என்பது தெரிகிறது. மற்றப் பட்டணங்களில் அவருடைய குணமாக்கும் அற்புதங்களைக் குறித்து அவர்கள் கேள்விப் பட்டிருந்தாலும், அவர் குணமாக்கும் வல்லமையைப் பெற்றிருப்பதாக அவர்கள் விசுவாசிக்கவில்லை, அதன் விளைவாக அவரால் அவர்களைக் குணமாக்க முடியவில்லை. மேலும், பரிசுத்த ஆவியானவர் நாசரேத்தில் அவருக்கு எந்த ‘‘குணமாக்கும் வரத்தையும்’’ வழங்கவில்லை என்பதும் தெரிகிறது. அதற்கு என்ன காரணம் என்பது ஒருவருக்கும் தெரியாது.

இயேசுவானவர் நாசரேத்துக்குச் சென்றபோது என்ன நடந்தது என்பதை மாற்குவைவிட, லூக்கா இன்னும் தெளிவாக விளக்குகிறார்:

> பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று. அவர்களுடைய ஜெபஆலயங்களில் அவர் உபதேசித்து, எல்லாராலும் புகழப்பட்டார். தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது: கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர் களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர் களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு, வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி, பணிவிடைக்

> காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார்; ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது. அப்பொழுது அவர் அவர்களோடே பேசத் தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேத வாக்கியம் இன்றைய்த் தினம் நிறைவேறிற்று என்றார். எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள் [லூக்கா 4:16–22].

தமது பேச்சைக் கேட்பவர்கள் *தாமே* ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திலுள்ள அபிஷேகம்பெற்ற ஒருவர் என்பதை விசுவாசிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்கள் விசுவாசித்து, தமது அபிஷேகத்தின் எல்லாப் பயன்களையும் பெற வேண்டும் என்பதே அவருடைய நம்பிக்கையாக இருந்தது. ஏசாயாவின் வார்த்தைகளின்படி சிறையிருப்பு மற்றும் ஒடுக்கப்படுதலிலிருந்து விடுதலையும், பார்வையற்றவர்களுக்குப் பார்வையும் இந்தப் பயன்களில் உள்ளடங்கியிருக்கிறது.[55] ஆனால் அவர்கள் விசுவாசிக்கவில்லை. அவருடைய பேசும் திறனால் அவர்கள் கவரப்பட்டாலும், யோசேப்பின் குமாரன் சிறப்பான ஒருவர் என்பதை விசுவாசிக்க அவர்கள் முன்வரவில்லை. அவர்களுடைய விசுவாசமின்மையை உணர்ந்த இயேசுவானவர் இப்படிச் சொன்னார்:

> அவர் அவர்களை நோக்கி: வைத்தியனே, உன்னைத்தானே குணமாக்கிக்கொள் என்கிற பழமொழியைச் சொல்லி, நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர்நகூமில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள் என்பது நிச்சயம். ஆனாலும் தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்பட மாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் [லூக்கா 4:23–24].

[55] இவையெல்லாமே சரீரப்பிரகாரமான குணமாகுதலைக் குறிப்பிடுகிறவைகளாக இருக்கலாம். வியாதியை ஒடுக்குதலாகவும் கருதலாம். ஏனென்றால் வேதாகமம் இப்படிச் சொல்லுகிறது: ‘‘நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்’’ [அப். 10:38].





அவர் கப்பர்நகூமில் செய்த காரியங்களை இங்கேயும் செய்வாரா என்று பார்க்கும்படி இயேசுவின் சொந்த ஊர் மக்கள் காத்திருந்தார்கள். அவர்களுடைய மனோபாவம் எதிர்பார்க்கும் விசுவாசமாக இருக்கவில்லை, சந்தேகத்தோடு அவநம்பிக்கையும் கொண்ட மனோபாவமாகவே இருந்தது. அவர்களுடைய விசுவாசக் குறைவினால் அவர் அற்புதங்களைச் செய்வதையும், பெரிய குணமாக்குதலைச் செய்வதையும் அவர்கள் கட்டுப்படுத்தினார்கள்.

### நாசரேத்தில் இயேசுவானவருக்கு மற்றொரு கட்டுப்பாடு

நாசரேத்தில் இயேசுவானவர் கூறிய அடுத்த வார்த்தைகளிலிருந்து அவர் ‘‘குணமாக்குதலின் வரங்களின்’’ மூலம் தம்மை வெளிப்படுத்தாதபடி பரிசுத்த ஆவியானவரின் சித்தத்தினாலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார் என்பது தெரிகிறது.

> அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப் பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை. அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் [லூக்கா 4:25–27].

இஸ்ரவேலர் மூன்றாண்டுகளாகப் பஞ்சத்தில் அவதிப்பட்டபோது, எலியாவினால் *தான்* விரும்பிய எல்லா விதவைகளின் மாவையும் எண்ணெயையும் பெருகச் செய்ய முடியவில்லை என்பதையே இயேசுவானவர் சுட்டிக்காட்டுகிறார் [பார்க்க, 1 இரா. 17:9–16]. அந்த வேளையில் இஸ்ரவேலில் எண்ணிக்கையில்லாத பல விதவைகள் துன்பப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் இஸ்ரவேலைச் சேராத ஒரு விதவைக்கு மட்டும் உதவும்படி ஆவியானவர் எலியாவுக்கு அபிஷேகம் கொடுத்தார். இதைப்போலவே, எலிசாவினால் *தான்* விரும்பிய எல்லாத் தொழுநோயாளிகளையும் குணமாக்க முடியாது. நாகமான் குணமாக்கப்பட்டபோது, இஸ்ரவேலில் எண்ணற்ற தொழுநோயாளிகள் இருந்தார்கள் என்ற உண்மை இதை நிரூபிக்கிறது. எலிசாவினால் தான் விரும்பியபடி தெரிந்துகொள்ள முடிந்திருந்தால், விக்கிரகாராதனை

செய்யும் நாகமானைக் குணமாக்குவதற்கு முன்பாகச் சக இஸ்ரவேலரை அவர் குணமாக்கியிருப்பார் [பார்க்க, 2 இரா. 5:1–14].

எலியாவும் எலிசாவும் தீர்க்கதரிசிகளாக, பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பெற்றவர்களாக இருந்தார்கள். ஆவியானவர் தமது சித்தப்படி பல்வேறு வரங்களில் அவர்களைப் பயன்படுத்தினார். தேவன் ஏன் எலியாவை வேறுசில விதவைகளிடம் அனுப்பவில்லை? எனக்குத் தெரியாது. தேவன் ஏன் எலிசாவை வேறுசில தொழுநோயாளிகளைக் குணமாக்கும்படி பயன்படுத்தவில்லை? எனக்குத் தெரியாது. தேவனைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது.

என்றாலும், இந்த இரண்டு பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளும், எந்த விதவையின் தேவையைச் சந்திப்பதும், எந்தத் தொழுநோயாளியைக் குணமாக்குவதும் தேவனுடைய சித்தம் அல்ல என்பதை நிரூபிக்க வில்லை. எலியாவின் நாட்களில், இஸ்ரவேலரும் அவர்களுடைய தீய அரசனாகிய ஆகாபும் தங்கள் பாவங்களைக்குறித்து மனந்திரும்பியிருப் பார்களானால், அவர்களைப் பாதித்த பஞ்சத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கலாம். அந்தப் பஞ்சம் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் ஒரு வடிவமாக இருந்தது. தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை விசுவாசித்து, கீழ்ப்படிந்திருந்தார்கள் என்றால் இஸ்ரவேலிலிருந்த எல்லாத் தொழுநோயாளிகளும் குணமாக்கப் பட்டிருக்கலாம். ஏனென்றால் அந்த உடன்படிக்கை சரீரப்பிரகாரமான குணமாகுதலையும் உள்ளடக்கியிருக்கிறது என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம்.

எலியாவையும், எலிசாவையும்போலத் தாமும் அதே கட்டுப்பாட்டில் இருப்பதாக இயேசுவானவர் நாசரேத்தில் தமக்குச் செவி கொடுத்தவர்களுக்கு வெளிப்படுத்தினார். ஏதோ காரணத்துக்காக, பரிசுத்த ஆவியானவர் நாசரேத்தில் இயேசுவானவருக்கு எந்தக் ''குணமாக்கும் வரத்தையும்'' கொடுக்கவில்லை. இந்த உண்மையும், நாசரேத்தின் மக்களுடைய அவநம்பிக்கையும் சேர்ந்து, அந்தப் பட்டணத்தில் இயேசுவானவர் எந்தப் பெரிய அற்புதத்தையும் செய்யாமல் தடுத்துவிட்டது.

## இயேசுவானவரின் மூலமாக ''குணமாக்குதலின் வரம்'' செயல்பட்ட ஒரு நிகழ்ச்சி

இயேசுவானவரால் செய்யப்பட்ட பல்வேறு அற்புதங்களைக் குறித்த விவரங்களை நாம் சுவிசேஷங்களில் வாசிப்போமானால், பெரும்பாலான மக்கள் ''குணமாக்குதலின் வரத்தினால்'' அல்ல, அவர்களுடைய விசுவாசத்தினால் குணமாக்கப்பட்டார்கள் என்பதை நாம் பார்க்கலாம். இவை இரண்டுக்கும் எடுத்துக்காட்டுகளைப் பார்த்து, இவைகளுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளை நாம் ஆராய்ந்து





பார்ப்போம். முதலில் பெதஸ்தா குளத்தினருகே உடல்ஊனமுற்றவனாக இருந்த ஒருவன் இயேசுவினால் குணமாக்கப்பட்ட நிகழ்ச்சியைப் பார்ப்போம். அவன் அவனுடைய விசுவாசத்தினால் குணமாக்கப்பட வில்லை. இயேசுவானவரின் மூலமாகச் செயல்பட்ட ''குணமாக்கும் வரத்தினாலேயே'' அவனுக்குச் சுகம் கிடைத்தது.

> எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டு வாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு. அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப் பார்கள். ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதி யஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான். முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான். படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். அதற்கு வியாதிஸ்தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப் படும்போது என்னைக் குளத்தில் கொண்டு போய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற் குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கி விடுகிறான் என்றான். இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது [யோவான் 5:2–9].

இந்த மனிதன் தனது விசுவாசத்தினால் அல்ல, ஒரு ''குணமாக்கும் வரத்தினால்'' குணமாக்கப்பட்டான் என்பதை நாம் எப்படி அறிவோம்? பல காரியங்கள் இதைச் சுட்டிக்காட்டுகின்றன.

முதலாவதாக, இந்த மனிதன் இயேசுவை நாடவில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக, இயேசுவே அவன் குளத்தினருகே அமர்ந்திருந்ததைக் கண்டார். இந்த மனிதன் இயேசுவைத் தேடியிருப் பான் என்றால் அது அவன் அவரை விசுவாசிக்கிறான் என்பதாக ஆகியிருக்கும்.

இரண்டாவதாக, இயேசுவானவர் அவனிடம் அவனுடைய விசுவாசம் அவனைக் குணமாக்கியது என்று சொல்லவில்லை. பெரும்பாலும் அவர் மற்ற மக்களைக் குணமாக்கியபோது இப்படிச் சொல்லியிருக்கிறார்.

மூன்றாவதாக, பின்னால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனிடம் அவனை எழுந்து நடக்கச் சொன்னது யார் என்ற கேள்வியைக் கேட்டபோது தான் அவரை அறிந்திருக்கவில்லை என்று அவன் பதிலளித்தான். எனவே இயேசுவின்மீது அவன் கொண்டிருந்த விசுவாசம் அவனைக் குணமாக்கவில்லை என்பது நிச்சயமாகிறது. இது ஆவியானவரின் சித்தப்படி கொடுக்கப்பட்ட ''குணமாக்கும் வரத்தினால்'' ஒருவன் குணமாக்கப்பட்டதற்கு மிகச் சரியான எடுத்துக் காட்டாக இருக்கிறது.

தண்ணீர் கலக்கப்படுவதற்காகத் திரளான நோயாளிகள் காத்திருந்த போதிலும், இயேசுவானவர் தனிப்பட்ட ஒருவனை மட்டுமே குணமாக்கினார் என்பதையும், மற்றவர்களை விட்டுவிட்டார் என்பதையும் கவனியுங்கள். ஏன்? மறுபடியுமாக, எனக்குத் தெரியாது. ஆனால் இந்த நிகழ்ச்சி ஒருவர் நோயாளியாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் என்பதை நிரூபிக்கவில்லை. அந்த நோயாளிகளில் எவரும் இயேசுவின்மீது விசுவாசம் வைப்பதின்மூலம் குணமாகியிருக்கலாம். ஒருவேளை இதுவே அந்த மனிதன் இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் குணமாக்கப்பட்டதற்குக் காரணமாக இருக்கலாம். அது நோயாளிகளின் கவனத்தை இயேசுவிடம் திருப்பும்படியானதாக இருக்கும். அவர்கள் விசுவாசிப்பார்களானால் இவரால் மட்டுமே அவர்களைக் குணமாக்க முடியும்.

பலமுறை ''குணமாக்குதலின் வரங்கள்'' ''அற்புத அடையாளங்கள்'' என்ற வகையின்கீழாக வருகின்றன. இந்த அற்புதங்கள் இயேசுவானவரின்மீது கவனத்தைத் திருப்பும்படியாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவேதான் பிலிப்பைப் போன்ற புதிய ஏற்பாட்டு சுவிசேஷகர்களுக்குப் பல ''குணமாக்கும் வரங்கள்'' கொடுக்கப்பட்டிருந்தன. ஏனென்றால் அவர்கள் செய்த அற்புதங்கள் அவர்கள் பிரசங்கித்த சுவிசேஷத்தின்மீது மக்களின் கவனத்தைத் திருப்பின [பார்க்க, அப். 8:5–8].

நோய்வாய்ப்பட்டிருக்கும் கிறிஸ்தவர்கள் ''குணமாக்குதலின் வரத்தைப்'' பெற்றிருக்கும் எவராவது வந்து தங்களைக் குணமாக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கக் கூடாது. இயேசுவில் விசுவாசம் வைப்பதின்மூலம் குணமாகுதலைப் பெற முடியும். எல்லோரும் குணமாக்கும் வரங்களின் மூலமாகக் குணமாக்கப்படாவிட்டாலும், எல்லோரும் தங்கள் விசுவாசத்தின் மூலமாகக் குணமாக்கப்பட முடியும். அடிப்படையில் அவிசுவாசிகள் குணமாக்கப்பட்டு,





அவர்கள் சுவிசேஷத்தை நோக்கி இழுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே சபையில் குணமாக்குதலின் வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் குணமாக்குதலின் வரத்தினால் குணமாக்கப்பட மாட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் தேவன் தமது பிள்ளைகள் விசுவாசத்தின் மூலமாகக் குணமாகுதலைப் பெற வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

### தனது விசுவாசத்தினால் ஒருவர் குணமாகியதற்கு எடுத்துக்காட்டு

பர்திமேயு என்ற பார்வையற்றவன் தனது விசுவாசத்தினால் இயேசுவின்மூலம் பார்வையைப் பெற்றான். மாற்கு சுவிசேஷத்தில் இந்த நிகழ்ச்சியை நாம் வாசிப்போம்:

> பின்பு அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்படுகிறபோது, திமேயுவின் குமாரனாகிய பர்திமேயு என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான். அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று, முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று, அவனை அழைத்துவரச் சொன்னார். அவர்கள் அந்தக் குருடனை அழைத்து: திடன் கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள். உடனே அவன் தன் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான். இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்தக் குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின்சென்றான் [மாற்கு 10:46–52].

முதலாவதாக, இயேசுவானவர் பர்திமேயுவை நாடிச் செல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். [இது பெதஸ்தா குளத்தருகே நடந்ததற்கு முற்றிலும் எதிர்மாறானதாக இருக்கிறது]. உண்மையில் இயேசு அவனைக் கடந்து சென்று கொண்டிருந்தார். பர்திமேயு அவரை

அழைத்திராவிட்டால், இயேசு தொடர்ந்து சென்றிருப்பார். அப்போது பர்திமேயு குணமாக்கப்பட்டிருக்க முடியாது.

இப்போது இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். பர்திமேயு அங்கேயே உட்கார்ந்துகொண்டு ‘‘நான் குணமாக்கப்படுவது இயேசுவின் சித்தமாக இருக்குமானால், அவர் வந்து என்னைக் குணமாக்கட்டும்’’ என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டிருந்தால் என்ன நடத்திருக்கும்? அவன் குணமாக்கப்படுவது இயேசுவின் சித்தம் என்பதை இந்த நிகழ்ச்சி தெளிவுபடுத்தினாலும்கூட. பர்திமேயு ஒருபோதும் குணமாக்கப்பட்டிருக்க முடியாது. அவன் இயேசுவை நோக்கிக் குரல் கொடுத்ததே அவனுடைய விசுவாசத்துக்கு முதல் அடையாளமாக இருக்கிறது.

இரண்டாவதாக, பர்திமேயு தன்னை அமைதிப்படுத்த முயன்றவர்களினால் ஊக்கமிழந்து போகவில்லை என்பதைக் கவனியுங்கள். மக்கள் அவனை அமைதிப்படுத்த முயன்றபோது, அவன் ‘‘ முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்’’ [மாற்கு 10:48]. இது அவனுடைய விசுவாசத்தைக் காட்டுகிறது.

மூன்றாவதாக, இயேசுவானவர் பர்திமேயு முதலில் கூப்பிட்டபோது அதற்குச் செவிசாய்க்கவில்லை என்பதைக் கவனியுங்கள். ஒருவேளை அவன் முதலில் கூப்பிட்டது அவருடைய காதுகளில் விழாமல் இருந்திருக்கலாம், அப்படி விழுந்திருந்தாலும் அவர் அதற்குச் செவி கொடுக்கவில்லை. அதாவது அவனுடைய விசுவாசம் சோதிக்கப் படும்படி அவர் அனுமதித்தார்.

பர்திமேயு ஒருமுறை மட்டுமே கூப்பிட்டுவிட்டு நிறுத்திக் கொண்டிருப்பானானால் அவன் குணமாக்கப்பட்டிருக்க முடியாது. நாமும்கூடப் பலமுறை நமது ஜெபங்களுக்குப் பதில் கிடைக்காதது போலத் தோன்றும்போது ஊக்கமாக ஜெபிக்க வேண்டியிருக்கிறது. அப்போது நமது விசுவாசம் சோதிக்கப்படுகிறபடியால், நாம் முரண்பாடான சூழ்நிலைகளால் ஊக்கமிழந்து போய்விடாதபடி நமது விசுவாசத்தில் உறுதியாகத் தரித்திருக்க வேண்டும்.

## பர்திமேயுவின் விசுவாசம் இன்னும் சுட்டிக்காட்டப்படுகிறது

இயேசுவானவர் இறுதியாக அவனை வரும்படி அழைத்தபோது, அவன் தன் மேல் வஸ்திரத்தை எறிந்துவிட்டான் என்று வேதாகமம் சொல்லுகிறது. என்னுடைய அறிவின்படி இயேசுவானவரின் நாட்களில் பார்வையற்றவர்கள் தாங்கள் பார்வையற்றவர்கள் என்பதைக் காட்டுவதற்காக ஒருவகைப்பட்ட மேல் வஸ்திரத்தை அணிந்திருந்தார்கள் என்று நினைக்கிறேன். அது உண்மையாக இருக்குமானால், இயேசுவானவர் அழைத்தபோது பர்திமேயு தனது மேல் வஸ்திரத்தை எறிந்து போட்டதின்மூலம் இனிமேல் அதற்குத் தேவையிருக்காது என்பதை





விசுவாசித்தான் என்பது தெளிவாகிறது. அவனுடைய விசுவாசம் மறுபடியுமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் அவன் தன் வஸ்திரத்தை எறிந்தபோது, அவன் ‘‘எழுந்தான்’’ என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தனக்கு நல்லதொரு காரியம் நடக்கப்போகிறது என்பதை அவன் எதிர்பார்த்திருந்தான் என்பதை இது வெளிப்படுத்துகிறது. குணமாகுதலுக்கான விசுவாசத்தைப் பெற்றிருக்கிறவர்கள் குணமாக்கும்படி தேவனிடம் ஜெபிக்கும்போது உற்சாகத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் தாங்கள் குணமாக்கப்படுவோம் என்பதை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அவன் தமக்கு முன்பாக வந்து நின்றபோது, இயேசுவானவர் மறுபடியுமாக அவனுடைய விசுவாசத்தைச் சோதிப்பதைக் கவனியுங்கள். ‘‘நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய்’’ என்று அவர் அவனிடம் கேட்டார். பர்திமேயு கொடுத்த பதிலிலிருந்து இயேசுவால் தனக்குப் பார்வையைக் கொடுக்க முடியும் என்று அவன் விசுவாசித்தது தெளிவாகிறது.

இறுதியாக இயேசு அவனிடம் அவனுடைய விசுவாசமே அவனை இரட்சித்தது என்று கூறினார். தேவன் மனிதரிடையே பாரபட்சம் காட்டுகிறவராக இராதபடியால், பர்திமேயு விசுவாசத்தினால் குணமாக்கப்பட்டிருக்கிறபடியால், எவரும் விசுவாசத்தினால் குணமாக்கப்பட முடியும்.

## மேலும் ஆய்வுக்கு...

கீழே நான் சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ளபடி. இயேசுவின் இருபத்தொரு குணமாக்கும் அற்புதங்களைப் பட்டியலாகக் கொடுத்திருக்கிறேன். உண்மையில் இயேசுவானவர் இந்த இருபத்தொரு நபர்களுக்கும் அதிகமானவர்களைக் குணமாக்கினார். ஆனால் எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்பட்டுள்ளவைகளில் நோயாளியைக் குறித்த சில விவரங்களும், அவர் எப்படிக் குணமாக்கப்பட்டார் என்ற விவரமும் கொடுக்கப்பட்டுள்ளன.

நான் இந்தப் பட்டியலை இரண்டு பெரிய பிரிவுகளாகப் பிரித்திருக்கிறேன் – விசுவாசத்தினால் குணமாக்கப்பட்டவர்கள், குணமாக்குதலின் வரங்களின் மூலமாகக் குணமாக்கப்பட்டவர்கள். பெரும்பாலும் மக்கள் தங்கள் விசுவாசத்தினால் குணமாக்கப்பட்டபோது, இயேசுவானவர் அவர்களிடம் அவர்களுடைய குணமாகுதலைக் குறித்துச் சொல்லாமல் அமைதியாக இருக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார் என்பதை நான் கவனித்திருக்கிறேன். இவை ‘‘குணமாக்குதலின் வரங்கள்’’ அல்ல என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. ஏனென்றால் இயேசுவையோ அல்லது சுவிசேஷத்தையோ விளம்பரப்படுத்துவதற்காக நோயாளிகள் குணமாக்கப்படவில்லை.

## குணமாகுதலுக்கு விசுவாசமே காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள்

**1. நூற்றுக்கதிபதியின் சேவகன் (அல்லது வேலைக்காரன்)** மத். 8:5—13; லூக்கா 7:2=10 ''நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது.''

**2. கூரையின் மூலமாக இறக்கப்பட்ட திமிர்வாதக்காரன்.** மத். 9:2—8; மாற்கு 2:3—11; லூக்கா 5:18—26. ''அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு... நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ...என்றார்.''

**3. யவீருவின் மகள்.** மத். 9:18—26; மாற்கு 5:22—43; லூக்கா 8:41—56. ''பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு... நடந்ததை ஒருவருக்கும் சொல்லாதிருக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். ''

**4. பெரும்பாடுள்ள ஸ்திரீ.** மத். 9:20—22; மாற்கு 5:25—34; லூக்கா 8:43—48. ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது.''

**5. பார்வையற்ற இருவர்.** மத். 9:27—31. ''உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது ...இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.''

**6. பார்வையற்ற பர்திமேயு.** மாற்கு 10:46—52; லூக்கா 18:35—43. ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது.''

**7. பத்து தொழுநோயாளிகள்.** லூக்கா 17:12—19. ''உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது.''

**8. ராஜாவின் மனுஷனுடைய குமாரன்.** யோவான் 4: 46—53. ''அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான்.''

அடுத்த நான்கு எடுத்துக்காட்டுகளில், நோய்வாய்ப்பட்டவரின் விசுவாசம் குறிப்பிடப்படவில்லை. ஆனால் நோயாளியின் வார்த்தை மற்றும் செயலின்மூலமாக அது சுட்டிக்காட்டப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கீழே பத்தாவது எண்ணில் குறிப்பிடப்படும் பார்வையற்ற இருவரும் பர்திமேயு செய்ததுபோல இயேசுவானவரை நோக்கிக் குரல் கொடுத்தார்கள். அடுத்த நான்கு எடுத்துக்காட்டிலும் உள்ள நோயாளிகள் எல்லோருமே இயேசுவை நாடினார்கள், இதுவே அவர்களுடைய விசுவாசத்துக்கு அடையாளமாக இருக்கிறது. இவர்களில் மூன்று பேரிடம் இயேசுவானவர் அவர்கள் குணமடைந்ததை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம் என்று கூறினார். இதுவும் இவை ''குணமாக்குதலின் வரங்களின்'' செயல்பாடுகள் அல்ல என்பதைத் தெளிவாக்குகிறது.





**9. தேவனுடைய சித்தத்தை அறியாத தொழுநோயாளி.** மத். 8:2—4; மாற்கு 1:40—45; லூக்கா 5:12—14. ''நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல்...''

**10. பார்வையற்ற இருவர்** (பர்திமேயு அவர்களில் ஒருவனாக இருக்கலாம்). மத். 20:30—34. ''ஆண்டவரே, ... எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். ''

**11. பேசவும் கேட்கவும் கூடாதிருந்தவன்.** மாற்கு 7:32—36. ''அதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்.''

**12. பார்வையற்ற ஒருவன்.** மாற்கு 8:22—26. ''நீ கிராமத்தில் பிரவேசியாமலும், கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு.''

விசுவாசத்தினால் குணமாக்கப்பட்ட கீழேயுள்ள இருவரும் உண்மையில் நோயிலிருந்து குணமாக்கப்படவில்லை — அவர்கள் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் இந்த விடுதலைக்கு அவர்களுடைய விசுவாசமே காரணம் என்று இயேசுவானவர் உறுதிப்படுத்தினார்.

**13. சந்திரரோகியான மகன்.** மத். 17:14—18; மாற்கு 9:17—27; லூக்கா 9:38—42. ''இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்.''

14. **சீரோபேனிக்கியா தேசத்து ஸ்திரீயின் மகள்.** மத். 15:22—28; மாற்கு 7:25—30. ''ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது.''

## ''குணமாக்குதலின் வரங்களின்'' மூலமாகக் குணமடைந்தவர்களின் எடுத்துக்காட்டு

கீழேயுள்ள ஏழு எடுத்துக்காட்டுகளிலும் உள்ளவர்கள் குணமாக்குதலின் வரங்களின் மூலமாகக் குணமாக்கப்பட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. என்றாலும், முதல் மூன்று எடுத்துக்காட்டுகளில் உள்ளவர்கள் குணமாக்கப்படுவதற்கு முன்பாக இயேசுவானவரின் ஒரு திட்டவட்டமான கட்டளைக்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டியிருந்தது. இவைகளில் எதிலும் இயேசுவானவர் குணமடைந்தவர்களிடம் அதை எவருக்கும் சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லை. இவைகளில் எந்த எடுத்துக்காட்டிலும் எவரும் இயேசுவைத் தேடி வரவில்லை.

**15. சூம்பின கையையுடைய மனிதன்:** மத். 12:9—13; மாற்கு 3:1—5; லூக்கா 6:6—10. ‘‘ எழுந்து, நடுவே நில்... உன் கையை நீட்டு.’’

**16. பெதஸ்தா குளத்தருகேயிருந்த மனிதன்:** யோவான் 5:2—9. ‘‘எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட’’

**17. பிறவியிலிருந்தே பார்வையற்றவனாகப் பிறந்த மனிதன்:** யோவான் 9:1—38. ‘‘நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு.’’

18. **பேதுருவின் மாமியார்:** மத். 8:14—15; மாற்கு 1:30—31; லூக்கா 4:38—39.

**19. பதினெட்டு ஆண்டுகளாகக் கூனமாக இருந்த பெண்:** லூக்கா 13:11—16.

**20. நீர்க்கோவை வியாதியுள்ளவன்:** லூக்கா 14:2—4

**21. பிரதான ஆசாரியனின் வேலைக்காரன்:** லூக்கா 22:50—51.

மேலே கொடுக்கப்பட்டுள்ள இருபத்தொரு எடுத்துக்காட்டுகளிலும், வயதுவந்த ஒருவர் வயதுவந்த மற்றொருவரின் விசுவாசத்தினால் *மட்டும்* குணமாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. அப்படி மற்றொருவரின் விசுவாசத்தினால் குணமாக்கப்பட்டவர்கள் பெற்றோரின் விசுவாசத்தினால் குணமாக்கப்பட்ட பிள்ளைகளாகவே இருந்தார்கள் [பார்க்க, எடுத்துக் காட்டு 1, 3, 8, 13, 14].

முதலாம் மற்றும் இரண்டாம் எடுத்துக்காட்டுகளே விதிவிலக்காக இருக்கின்றன– நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன், கூரையின் வழியாக இறக்கப்பட்ட திமிர்வாதக்காரன். நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைப் பொருத்த வரையில் வேலைக்காரனைக் குறிக்க *பயஸ்* என்ற கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதே சொல் மத்தேயு 17:18 வசனத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும்போது, ‘‘அந்த *இளைஞன்* சொஸ்தமானான்’’ என்று சொல்லப்பட்டிருக்கிறது [அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

குணமடைந்தவன் நூற்றுக்கதிபதியின் மகனாக இராமல் வேலைக்காரனாக இருந்தாலும் அவன் வயதில் குறைந்த சிறுவனாகவே இருக்க வேண்டும். எனவே சட்டபூர்வமாக அவனுக்குப் பாதுகாவலனாக இருந்த நூற்றுக்கதிபதியே அவனுக்குப் பொறுப்பானவனாக இருக்கிறான். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காகத் தங்கள் விசுவாசத்தைச் செயல் படுத்துவதுபோல, அவனும் செயல்படுத்தலாம்.

கூரையின் மூலமாக உள்ளே இறக்கப்பட்ட திமிர்வாதக்காரனைப் பொருத்தவரையில் அவன்தானே விசுவாசத்தைக் கொண்டிருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் கூரையைப் பிரித்து, உள்ளே இறக்கத் தனது நண்பர்களை அனுமதித்திருக்க மாட்டான். எனவே அவன் தனது நண்பர்களின் விசுவாசத்தினால் *மட்டுமே* குணமாக்கப்படவில்லை.





நோயாளியாக இருக்கும் வயதுவந்தவர் தான் விசுவாசத்தைப் பெற்றிராவிட்டால், வயதுவந்த மற்றொருவரின் விசுவாசத்தின் மூலமாகக் குணமாக்கப்பட முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது. என்றாலும் நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவருக்காக அவருடைய ஒப்புதலோடு மற்றொரு வயதுவந்தவர் ஜெபிக்கலாம். ஆனால் நோயாளியின் அவநம்பிக்கை மற்றவரின் விசுவாசத்தை ஒன்றுமில்லாததாக ஆக்கிவிடக் கூடும்.

என்றாலும், ஒரு குறிப்பிட்ட வயது வரையில் நமது சொந்தப் பிள்ளைகள் நமது விசுவாசத்தினால் குணமாக்கப்பட முடியும். என்றாலும் அவர்கள் ஒரு வயதை எட்டும்போது, அவர்கள் தங்கள் சொந்த விசுவாசத்தின் அடிப்படையில் தம்மிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

ஆண்டவருடைய குணமாக்குதலைக் குறித்த உங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தும்படியாக மேலேயுள்ள எடுத்துக்காட்டுகள் ஒவ்வொன்றையும் உங்கள் வேதாகமத்தில் எடுத்துப் படிக்கும்படி நான் உங்களிடம் வேண்டிக்கொள்ளுகிறேன்.

## குணமாக்கும் அபிஷேகம்

முதலாவதாக, இயேசுவானவர் இந்த உலக ஊழியத்தின்போது, உணரக்கூடிய குணமாக்குதலுக்கான வல்லமையினால் அபிஷேகம் செய்யப்பட்டிருந்தார் என்பதை நாம் அறிந்துகொள்ளுவது முக்கியமாகும். அதாவது, இந்தக் குணமாக்குதலின் அபிஷேகம் தமது சரீரத்திலிருந்து புறப்படுவதை அவர் உணர்ந்தார். குணமாக்கப்படும் நோயாளி அந்த அபிஷேகத்தின் வல்லமை தனது சரீரத்துக்குள் பிரவேசிப்பதை உணர முடிந்தது. எடுத்துக்காட்டாக, லூக்கா 6:19 வசனம் ‘‘அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு, எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்’’ என்று சொல்லுகிறது.

இந்தக் குணமாக்குதலின் அபிஷேகம் இயேசுவின் வஸ்திரங் களையும் தோய்த்திருந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. இதனால் நோயாளி ஒருவன் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டபோது, குணமாக்கும் அபிஷேகம் அவருடைய சரீரத்திலிருந்து புறப்படும். மாற்கு 6:56 வசனத்தில் நாம் இப்படி வாசிக்கலாம்:

> அல்லாமலும் அவர் பிரவேசித்த கிராமங்கள் பட்டணங் கள் நாடுகள் எவைகளோ, அவைகளின் சந்தை வெளிகளிலே வியாதிக்காரரை வைத்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாக வேண்டும் என்று அவரை வேண்டிக்

> கொண்டார்கள்; அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்.

பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு, தான் குணமடைவோம் என்று விசுவாசித்த அதே கணத்தில் குணமாக்கப்பட்டாள் [பார்க்க, மாற்கு 5:25–34].

இயேசுவானவர் தொட்டுணரக் கூடிய குணமாக்கும் அபிஷேகத்தைப் பெற்றிருந்ததுபோல அப்போஸ்தலனாகிய பவுலும் தனது ஊழியத்தின் இறுதிக் காலத்தில் பெற்றிருந்தார்.

> பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன [அப். 19:11–12].

தொட்டுணரக் கூடிய குணமாக்குதலின் அபிஷேகம் பவுலின் சரீரத்தோடு தொடர்புகொள்ளும் எந்தத் துணியையும் வல்லமையினால் தோய்த்திருந்தது. துணிகூடக் குணமாக்கும் வல்லமையைக் கடத்தக் கூடியதாக இருக்கிறது என்பது இதன்மூலம் தெரிகிறது!

இயேசுவானவர் மற்றும் பவுலின் நாட்களுக்குப் பிறகு தேவன் மாறிவிடவில்லை. இன்றும் தேவன் இயேசுவையும் பவுலையும் அபிஷேகித்ததுபோலக் குணமாக்கும் அபிஷகத்தினால் எவரையாவது அபிஷேகிக்கும்படி தெரிந்துகொள்ளுவாரானால், அதற்காக நாம் ஆச்சரியப்படக்கூடாது. ஆனால் இந்த வரங்கள் புதிதாக விசுவாசிகளாக ஆனவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. காலம் கடந்து தாங்கள் உண்மையுள்ளவர்கள், சுயநலமில்லாதவர்கள் என்பதை நிரூபிப்பவர்களுக்கே இது அருளப்படுகிறது.



# 17

# ஆவியின் வரங்கள்

வேதாகமம் முழுவதிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் திடீரென்று பரிசுத்த ஆவியானவர் இயல்புக்கு அப்பாற்பட்ட திறன்களைக் கொடுப்பது குறித்த எடுத்துக்காட்டுகளை நாம் வேதாகமம் முழுவதிலும் பார்க்கலாம். புதிய ஏற்பாட்டில் இந்த இயல்புக்கு அப்பாற்பட்ட திறன்கள் ''ஆவியின் வரங்கள்'' என்று அழைக்கப்படுகின்றன. இவைகளைச் சம்பாதிக்க முடியாது என்கிறபடியால் இவை வரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. என்றாலும், தேவன் தாம் நம்பிக்கை வத்திருப்பவர்களை இவ்வாறு மேன்மைப்படுத்துகிறார். இயேசுவானவர் ''கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்'' என்று சொல்லியிருக்கிறார் [லூக்கா 16:10]. எனவே தேவனுக்கு முன்பாகத் தாங்கள் உண்மையுள்ளவர்கள் என்று நிரூபித்திருக்கிறவர்களுக்கு தேவன் இந்த வரங்களைக் கொடுப்பார் என்ற நிச்சயம் நமக்கு இருக்கிறது. பரிசுத்த ஆவியானவருக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுப்பது அவசியமாகும். தேவன் இப்படிப்பட்ட மக்களை இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் பயன்படுத்துவார். என்றாலும், தேவன் ஒருமுறை தீர்க்கதரிசனம் சொல்ல ஒரு கழுதையைக் கூடப் பயன்படுத்தியிருக்கிறார். எனவே அவர் தாம் விரும்பிய எவரையும் பயன்படுத்துவார். நாம் பரிபூரணராகும் வரை அவர் காத்திருப்பாரானால், நம்மில் எவரையும் அவரால் பயன்படுத்த முடியாது!

புதிய ஏற்பாட்டில், 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் ஆவியின் வரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. மொத்தம் ஒன்பது வரங்கள் உள்ளன:

> எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும்